# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2151/52 - 2019 නොවැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2019.11.29

*2151/52 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***2005 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 2அ பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளை***

2005 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 2அ பிரிவின் கீழ், எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம்,

1. (அ) மொத்த உள்ளீட்டுப் பெறுமதியில் அறுபது சதவீதத்தினை (60%) உள்நாட்டு வழங்கல்கள்/ மூலங்களிலிருந்து நிதியிடப்படுமாயின், இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல்கள், விருந்தினர் இல்லங்கள், உணவகங்கள் அல்லது நிகரான சேவைகளை வழங்குகின்ற அவற்றிற்கு நிகரான ஏனைய பிற நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற சேவை வழங்கல் மீது பூச்சிய சதவீதத்திலும் (0%).

   (ஆ) நிதிச் சேவைகள் வழங்கல்கள் மீது பதினைந்து (15%) சதவீதத்திலும்,

   (இ) 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 2095/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள அட்டவணையில் நிரல் I மற்றும் II என்பனவற்றில் இ. மு. குறியீடு மற்றும் விபரம் என்பனவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பொருட்களின் இறக்குமதியின் பேரில் அவற்றிற்கு நேரெதிரே அதே அட்டவணையின் III ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதத்திலும், மற்றும்

   (ஈ) இப்பந்தியின் (அ), (ஆ) மற்றும் (இ) உப பந்திகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறான, சேவை வழங்கல்/பொருட்களின் இறக்குமதி நீங்கலாக, ஏனைய பொருட்களின் இறக்குமதி மற்றும்/ அல்லது பொருட்களின் வழங்கல் அல்லது சேவை வழங்கல் மீது எட்டு (8%)) சதவீதத்திலும்.

பெறுமதிசேர் வரி அறவிடப்படல் வேண்டுமென இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.


1A - PG 4778 — 542 (2019/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. 2005 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறு, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2அ பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 2095/19 ஆம் இலக்க, 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதிய 2125/69 மற்றும் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிய 2147/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட கட்டளைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

3. இக்கட்டளையானது 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறுதல் வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ,
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2019, நவெம்பர் 29.

12-526

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.